# வல்லினம் மிகும் இடங்களும்

# மிகா இடங்களும்

CPO COLLEGE

## வல்லினம் மிகா இடங்கள்

**முன்னுரை :-**

வல்லெழுத்து மிகாமல் வரும் இடத்தை வலி மிகா இடம் என்கிறோம். வல்லெழுத்து மிகும்படி எழுதிப் பயிற்சி பெற்றதும் ஒரு சிக்கல் தோன்றும். வல்லெழுத்து மிகா இடங்களிலும் வல்லெழுத்து மிகும்படி எழுதவே எண்ணம் உண்டாகும்.

**வல்லினம் மிகாமல் வருதல் :-**

இரண்டு சொற்கள் சேரும்போது வருமொழி முதலில் க, ச, த, ப எனும் வல்லெழுத்துகள் வருமாயின் அவை சில இடங்களில் மிகாது. அவையே வல்லினம் மிகா இடங்களாகும்.

**சான்றுகள் :-**

எழுவாய் சொற்களை அடுத்து மிகாது

[எ.கா] தம்பி + படித்தான் = தம்பி படித்தான்

யானை + பிளிறியது = யானை பிளிறியது

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து.

அது + சென்றது = அது சென்றது

இது + சென்றது = இது சென்றது.

CPA COLLEGE

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து

எழுதிய + பாடல் = எழுதியபாடல்

எழுதாத + பாடல் = எழுதாத பாடல்

2-ம் வேற்றுமை உருபு (ஐ) மறைந்து வரும் இடங்களில் (2ம் வேற்றுமைத்தொகை)

[எ.கா] இலை + பறித்தேன் = இலைபறித்தேன்.

காய் + தின்றேன் = காய்தின்றேன்

வினைத் தொகையில்

[எ.கா] :- எழுது + பொருள் = எழுதுபொருள்

சுடு + சோறு = சுடுசோறு

உம்மைத் தொகையில்

தாய் + தந்தை = தாய்தந்தை

வெற்றிலை + பாக்கு = வெற்றிலைபாக்கு

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ இடைத்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால்

[எ.கா]

தின்று + தீர்த்தான் = தின்று தீர்த்தான்

செய்து + பார்த்தான் = செய்துபார்த்தான்.

CPA COLLEGE

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர,
படி என முடியும் பிறசொற்களை அடுத்து

[எ.கா] எழுதும் + படி + சொன்னேன் = எழுதும் படி சொன்னேன்

பாடும் + படி + கேட்ட = பாடும் படி கேட்டு

எட்டு, பத்து தவிர்த்த பிற எண்ணுப்பெயர்களுக்குப் பின் வரும் வலி மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + கட்டுரை = இரண்டு கட்டுரை

பல, சில என்னும் சொற்களில் வலி மிகாது

[எ.கா] பல + செடிகள் = பல செடிகள்

சில + கொடிகள் = சில கொடிகள்

விளிப்பெயர் பின் வலி மிகாது

[எ.கா] தம்பி + வா = தம்பிவா

இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் ஆகியவற்றின் பின் வரும் வலி மிகாது.

[எ.கா] கல + கல = கல கல

பாம்பு + பாம்பு = பாம்பு பாம்பு

உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும் வலி மிகாது

[எ.கா] செய்து + கொடு = செய்துகொடு

"அம்ம" என்னும் இடைச்சொல்லின் பின் வரும் வலி மிகாது.

[எ.கா] அம்ம + கொடிது = அம்ம கொடிது

முடிவுரை :

மேலே குறிப்பிட்டது போல வல்லினம் மிகாவ் வரக்கூடிய இடங்கள் தமிழில் பல உண்டு. மொழியின் வளர்ச்சிக்கு ஏற்ப வல்லினம் மிகா இடங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும்.